செ.வெ.எண்: 53 நாள்:24.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பட்டாசு விற்பனையாளர்கள் தமிழகஅரசு விதித்துள்ள நிபந்தனைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பட்டாசு சிறு வணிக விற்பனையாளர்கள் பட்டாசு விற்பனையின் போது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.10.2016) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் நடைபெறவுள்ள தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எவ்வித அசம்பாவிதங்களுமின்றி பட்டாசு விற்பனையை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டாசு சிறுவணிக விற்பனையாளர்கள் பட்டாசு விற்பனையின் போது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பட்டாசு சிறுவணிக விற்பனையாளர்கள் உரிமைதாரர் உரிமத்தில் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பான கெட்டி கட்டிடத்திற்குள் வைத்து தான் பட்டாசு வியாபாரம் செய்ய வேண்டும்.

கட்டிடத்திற்கு முன்பாக கூரை சாய்வோ, தகர சாய்வோ அல்லது இதர சாய்வுகளோ ஏற்படுத்தி வியாபாரம் செய்யக்கூடாது. பட்டாசு வியாபாரம் செய்யும் கட்டிடத்தில் எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருட்கள் ஏதும் வைத்திருக்கக்கூடாது. எண்ணெய் விளக்குகள், மெழுகுவர்த்தி போன்றவை பயன்படுத்தக்கூடாது. அதிக வெப்பம் ஏற்படுத்தும் ஒளி மிகுந்த விளக்குகளை கடைகளின் உள்ளே கண்டிப்பாக உபயோகிக்க கூடாது. உரிமம் வழங்கப்பட்ட கட்டிடத்தில் மணல் நிரப்பப்பட்ட வாளி 8 எண்ணிக்கை, 200 லிட்டர் தண்ணீர் பாரல், தீயணைப்புக்கருவி, தீயணைப்புத்துறையின் தடையின்மைச்சான்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் போன்றவற்றை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

மேலும் பட்டாசுக்கடை உரிமையாளரின் பெயர், பட்டாசு உரிமை எண், அருகாமையில் உள்ள தீயணைப்பு நிலையம் மற்றும் காவல் நிலைய தொலைப்பேசி எண்கள், சம்மந்தப்பட்ட வருவாய்த்துறை அலுவலரின் கைப்பேசி எண் உள்ளிட்ட அறிவிப்பு பலகையும் மற்றும் புகைப்பிடிக்காதீர்கள் என்ற வாசகம் கொண்ட அறிவிப்பு பலகையும் மாவட்டத்திலுள்ள அனைத்து பட்டாசு விற்பனைக்கடைகளிலும் பொதுமக்களுக்கு பார்வையில் தெரிவிக்கும் வகையில் வைத்திருக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட அலகுக்கும் கூடுதலாக எக்காரணம் கொண்டும் பட்டாசுகள் சேமித்தல் கூடாது. மேலும் தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள தீயணைப்பு நிலையம் அல்லது 101,102 ஆகிய தொலைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம். இதன் மூலம் பட்டாசு விற்பனையாளர்கள் தமிழகஅரசு வகுத்துள்ள நெறிமுறைகளை பட்டாசு விற்பனையின் போது முறையாக கடைபிடித்து விபத்தில்லா தீபாவளியை அனைவரும் கொண்டாட ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.ஹக்கீம்பாஷா, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., பட்டாசு சிறுவணிக விற்பனையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**